RNI-NO: TNTAM/2021/83936






# மாலை தந்தி
MALAI THANTHI

தமிழால் வெல்வோம்

DAILY EVENING

மாலை நாளிதழ்

Postel Regd. No: TN/5/SVA/2023-2025






சிவகங்கை | மலர்-4 | இதழ்- 353 | டிசம்பர்.23 2025 செவ்வாய்கிழமை | malaithanthi2020@gmail.com | 4 பக்கங்கள் | விலை ரூ. 5





## இந்து, முஸ்லீம், கிறிஸ்தவர்கள் இணைந்து கொண்டாடும் கிறிஸ்து ஒன்றிப்பு கிறிஸ்து பிறப்பு பெருவிழா

சிவகங்கை, டிச.23-

இயேசு ஒரு மதத்தின் அடையாளமாக அல்ல, மனிதநேயத்தின் அடையாளமாகப் பிறந்தார். இன்று உலகம் போர், பசிப்பு, வெறுப்பு, பொய்கள் ஆகியவற்றால் காயமடைந்துள்ளது.

துப்பாக்கிகளைக் கைவிட்டு குழந்தைகளை அணைத்துக் கொள்வதே உண்மையான கிறிஸ்துமஸ்.

கோயில்களும், தேவாலயங்களும், மசூதிகளும் மனிதரைப் பிரிக்கும் சுவர்களல்ல, மாறாக மனிதர்களை இணைக்கும் பாலங்களாக இருக்க வேண்டும்.

மதம் மனிதனை மனிதனுக்கு எதிரியாக மாற்றுமானால்,

அந்த மதத்தை மீண்டும் மனிதநேயத்தின் பாதையில் நிறுத்த வேண்டிய கடமை நம் ஒவ்வெருக்கும் உண்டு. கிறிஸ்து பிறப்பு என்னும் கிறிஸ்துமஸ் உலகத்திற்கு அமைதி, சமத்துவம், சகோதரத்துவத்தைக் கொண்டு வந்தது.

இதை ஒரு விழாவாக சிவகங்கை மண்ணில் கிறிஸ்தவர்கள், இந்துக்கள், இஸ்லாமியர்கள் இணைந்து ஒரு விழாவாக கிறிஸ்தவ ஒன்றிப்பு கிறிஸ்து பிறப்புப் பெருவிழாவாக 21. 12. 2025 ஞாயிறு மாலையில் புனித ஜஸ்டின் பெண்கள் மேல்நிலைப் பள்ளி வளாகத்தில் நடைபெற்றது.

இவ்விழாவைச் சிவகங்கை மறைமாவட்டம் முன்னெடுத்துச் செய்தது. மேதகு ஆயர் லூர்து ஆனந்தம் அவர்கள் தலைமையில் அருள்பணி. T.ஆரோக்கியசாமி அவர்களும் அலங்கார அன்னைப் பேராலயத்தின் அருள்பணி ஜெபமாலை சுரேஷ் அவர்களும் பங்கின் இறைமக்களும் இணைந்து இந்த விழாவை ஏற்பாடு செய்தார்கள். சிவகங்கை நகரில் உள்ள கத்தோலிக்க, சிஎஸ்ஐ, அசம்பளி ஆப் காட் சபைகளின் இறைமக்கள் இணைந்து கலை நிகழ்ச்சிகள் கொடுத்தார்கள்.

இதில் உயர்திரு. இனிகோ இருதயராஜ் MLA அவர்கள் சிறப்புரை வழங்கினர். அவர்களோடு K. முத்துக் கண்ணன், திரு. M. ஹாஜா மொய்தீன் மற்றும் பலர் சிறப்புரை ஆற்றினர்.

## தடையில்லா வர்த்தக ஒப்பந்தம் பிரதமர் மோடியுடன் நியூசிலாந்து பிரதமர் பேச்சு



புதுடில்லி: டிச.23-

இந்தியா நியூசிலாந்து இடையே தடையில்லா வர்த்தக ஒப்பந்தம் நிறைவடைந்த நிலையில், பிரதமர் மோடியுடன் நியூசிலாந்து பிரதமர் கிறிஸ்டோபர் லக்ஸன் தொலைபேசியில் பேச்சு நடத்தியுள்ளார்.

இது குறித்து நியூசி., பிரதமர் வெளியிட்டுள்ள எக்ஸ்தளப்பதிவில் கூறியிருப்பதாவது; தடையில்லா வர்த்தக ஒப்பந்தத்தின் மூலம் நியூசிலாந்தில் இருந்து இந்தியாவுக்கு ஏற்றுமதி செய்யப்படும் பொருட்களின் மீதான வரி 95 சதவீதம் குறைக்கவோ அல்லது நீக்கவோ வழிவகை செய்கிறது. இதனால், அடுத்த 20 ஆண்டுகளில் நியூசிலாந்தில் ஏற்றுமதி ரூ.9,863 கோடியில் இருந்து ரூ.11,650 கோடியாக அதிகரிக்கும் வாய்ப்பு ஏற்பட்டுள்ளது.

வர்த்தகத்தை ஊக்குவிப்பதன் மூலம் நியூசிலாந்தில் வேலைவாய்ப்பு, ஊதியம் உள்ளிட்டவற்றை அதிகரிக்கும். அதுமட்டுமில்லாமல், இந்த ஒப்பந்தம் நமது இரு நாடுகளுக்கிடையேயான வலுவான நட்பை மேலும் வலுப்படுத்துகிறது.

உலகில் வேகமாக வளரும் பொருளாதாரங்களைக் கொண்ட நாடுகளில் இந்தியாவும் ஒன்று. நியூசிலாந்து வர்த்தகத்தை 14 லட்சம் இந்தியர்கள் பயன்படுத்தும் வாய்ப்பு உருவாகிறது. இதுபோன்ற புதிய வர்த்தக ஒப்பந்தங்களின் மூலம், நாட்டின் பொருளாதாரம் வளர்வதற்கும், நியூசிலாந்து மக்களும் முன்னேறுவதற்கும் உதவுகின்றன. இதற்கேற்றாற் போல, அடிப்படைகளை சரிசெய்து எதிர்காலத்தை உருவாக்குவதில் அரசு கவனம் செலுத்தி வருகிறது, இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

## பொங்கலுக்கு முன்னர் 723 செவிலியருக்கு பணி நியமன ஆணை: அமைச்சர் மா.சுப்பிரமணியன் உறுதி



சென்னை, டிச.23-

ஒப்பந்த அடிப்படையில் பணிபுரியும் செவிலியர்களின் கோரிக்கை படிப்படியாக நிறைவேற்றப்படும் என மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன் தெரிவித்தார். மேலும், பொங்கல் பண்டிகைக்குள் 723 செவிலியருக்கு பணி நியமன ஆணைகள் வழங்கப்படும் என்றும் அவர் உறுதியளித்தார்.

பணி நிரந்தரம், சம வேலைக்கு சம ஊதியம் உள்ளிட்ட கோரிக்கைகளை வலியுறுத்தி தொகுப்பூதிய செவிலியர்கள் போராட்டம் நடத்தி வருகின்றனர்.

நேற்று 4வது நாளாக பகல், இரவாக செவிலியர்கள் போராட்டத்தில் ஈடுபட்டனர். கடும் பனியால் செவிலியர்களில் பலருக்கு உடல் நலக் குறைவு ஏற்பட்டுள்ளது. ஆனாலும் அவர்கள் போராட்டத்தை தொடர்கின்றனர். அதேபோல தமிழகம் முழுவதும் அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனைகள், மாவட்ட தலைமை மருத்துவமனைகளில் செவிலியர்கள் போராட்டத்தில் ஈடுபட்டு வருகின்றனர்.

இந்நிலையில், தமிழக சுகாதாரத் துறையில் 10 ஆண்டுகளாக தற்காலிகப் பணியாளர்களாக பணியாற்றும் 8 ஆயிரத்துக்கும் கூடுதலான செவிலியர்கள், தங்களுக்கு பணி நிரந்தரம் வழங்க வேண்டும் என்று 4 நாட்களாக போராடி வருகின்றனர். அவர்களை பணி நிரந்தரம் செய்ய முடியாது என்று தமிழக அரசு அறிவித்திருப்பது, ஆட்சியாளர்களின் ஆணவத்தைக் காட்டுகிறது என்று எதிர்க்கட்சிகள் செவிலியர் போராட்டத்துக்கு ஆதரவு தெரிவித்தன.

மேலும், போராட்டத்தில் ஈடுபட்டுள்ள செவிலியர்களின் கோரிக்கையை நிறைவேற்ற வேண்டும் என்று அரசு மருத்துவர் சங்கங்கள், சமூக ஆர்வலர்கள் வலியுறுத்தி வருகின்றனர்.

இந்நிலையில் இன்று மீண்டும் சுகாதாரத் துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன், போராட்டத்தில் ஈடுபட்டுள்ள செவிலியர்களுடன் பேச்சுவார்த்தை நடத்தினார்.

பின்னர் செய்தியாளர்களை சந்தித்த அமைச்சர் மா.சுப்பிரமணியன் கூறியதாவது: செவிலியர்கள் போராட்டத்தில் உள்ள நியாயமான கோரிக்கைகளைப் பரிசீலித்து அவற்றை நிறைவேற்றித் தர வேண்டும் என்று தமிழக முதல்வர் வலியுறுத்தியுள்ளார்கள். நிரந்தரப் பணியாளர்களைப் போலவே அனைத்து தொகுப்பூதிய செவிலியர்களுக்கும் மகப்பேறு விடுப்பு வழங்கக் கோரியுள்ளார்கள். இது சம்பந்தமாக அரசு பரிசீலித்து வருகிறது. அதன் மீதும் விரைவில் முடிவெடுக்கும்.

இதுவரை இந்த அரசு பொறுப்பேற்ற பின்னர் 3,614 ஒப்பந்த செவிலியர்கள் பணி நிரந்தரம் செய்யப்பட்டுள்ளனர். இதில் ஆண்டுதோறும் காலிப்பணியடங்கள் தாண்டி 1300 செவிலியர்கள் முதல்வர் திறந்துவைத்த அரசு மருத்துவமனைகளில் உருவாக்கப்பட்ட காலிப் பணியிடங்கள் உருவாக்கப்பட்டு பணியமர்த்தப்பட்டனர்.

மேலும் 7400 ஒப்பந்த செவிலியர்கள் உள்ளனர். இவர்களுக்காக 723 பணியிடங்கள் உருவாக்கப்பட்டு பொங்கலுக்கு முன்னர் பணி நியமன ஆணைகள் வழங்கப்படும். மற்றவை காலிப்பணியிடங்கள் உருவாகும் பட்சத்தில் படிப்படியாக நிரப்பப்படும். மேலும் அந்த காலிப்பணியிடங்களுக்கு பணி மூப்பு அடிப்படையில் முன்னுரிமை வழங்கப்படும்.

புதிய செவிலியர் கல்லூரிகளை உருவாக்குவது, கரோனா காலத்தில் பணியாற்றிய செவிலியர்களை பணியில் அமர்த்துவது உள்ளிட்ட நடவடிக்கைகளுக்கு செவிலியர் சங்கங்கள் ஆதரவு தெரிவித்துள்ளன. இவ்வாறு மா.சுப்பிரமணியன் கூறினார்



## மக்கள் கேட்ட நல்ல திட்டங்களை கொண்டு வராமல், டாஸ்மாக் மதுபான கடைகளை திமுக அரசு திறக்கிறது: சவுமியா அன்புமணி குற்றச்சாட்டு

ஆர்.கே.பேட்டை, டிச.23-

ஆர்.கே.பேட்டையில் பாமக சார்பில் நடைபெற்ற ‘தமிழக மகளிர் உரிமை மீட்புப் பயணம்’ நிகழ்ச்சியில் பங்கேற்ற ‘பசுமைத் தாயகம்’ அமைப்பின் தலைவர் சவுமியா அன்புமணி, பெண்கள் மற்றும் பாமகவினரை பார்த்து கையசைத்த காட்சி.

திருவள்ளூர்: ‘மக்கள் கேட்ட நல்ல திட்டங்களை எல்லாம் கொண்டு வராமல், யாரும் கேட்காத டாஸ்மாக் மதுபான கடைகளை திமுக அரசு திறக்கிறது’ என, ‘பசுமைத் தாயகம்’ அமைப்பு தலைவர் சவுமியா அன்புமணி குற்றம் சாட்டினார். ‘பசுமைத் தாயகம்’ அமைப்பு தலைவர் சவுமியா அன்புமணியின் ‘தமிழக மகளிர் உரிமை மீட்புப் பயணம்’நிகழ்வுநேற்று திருவள் ளூர் மாவட்டம், திருத்தணி அருகே ஆர் .கே.பேட்டையில் நடைபெற்றது.

இதில், சவுமியா அன்புமணி பேசியதாவது: ஆந்திர மாநிலத்தின் எல்லையோரத்தில் உள்ளதால், திருவள்ளூர் மாவட்டத்தில் அதிகளவில் கஞ்சா கடத்தப்படுகிறது. இதனால், திருவள்ளூர் மாவட்டத்தில் மட்டும் 60 ஆயிரம் கிலோ கஞ்சா புழங்குவதாக தகவல் வருகிறது.

திருவள்ளூர் மாவட்டத்தில் அதிகளவில் கஞ்சா புழங்குவதால், இளைஞர்களிடையே ஏற்பட்டுள்ள போதை பழக்கத்தால், பொதட்டூர்பேட்டையில் இன்சூரன்ஸ் பணத்துக்காக இரு மகன்கள், தந்தையையே பாம்பு கடிக்கச் செய்து கொன்றுள்ளனர். அசாம் மாநிலத்தைச் சேர்ந்த இளைஞரால், கும்மிடிப்பூண்டி அருகே ஆரம்பாக்கத்தில் சிறுமி ஒருவர் பாலியல் வன்கொடுமைக்கு ஆளாக்கப்பட்டுள்ளார்.

டாஸ்மாக் மதுபான கடையை திறப்பதற்கு எதற்காக ஒரு அரசாங்கம் நமக்கு வேண்டும்? திருத்தணியில் ஒரு நெசவு பூங்கா கொண்டு வரவேண்டும். திருவள்ளூர் மாவட்டத்தில் பூ விவசாயிகளுக்கு ஒரு நறுமணப் பொருட்கள் தயாரிக்கும் ஆலை அமைக்க வேண்டும் என்று பொதுமக்கள் கோரிக்கை வைத்தார்கள். அந்த கோரிக்கைகளை திமுக அரசு நிறைவேற்றவில்லை.

மக்கள் கேட்ட நல்ல திட்டங்களை எல்லாம் கொண்டு வராமல், யாரும் கேட்காத டாஸ்மாக் மதுபான கடைகளை திமுக அரசு திறக்கிறது. ஆகவே, வரக்கூடிய சட்டப்பேரவை தேர்தலில் பொதுமக்கள் சிந்தித்து நல்ல முடிவை எடுத்து, பாமக தலைவர் அன்புமணி பின்னால் நிற்கவேண்டும். அப்படி நின்றால்தான், மது போதை இல்லா தமிழ்நாடு உருவாகும். இவ்வாறு அவர் பேசினார்.

பாமகவினர் வாக்குவாதம்: சவுமியா அன்புமணி, நேற்று காலை திருத்தணி முருகன் கோயிலில் சுவாமி தரிசனம் செய்தார். அப்போது, சௌமியா அன்புமணியுடன் 5 நபர்களுக்கு அனுமதி வழங்கப்பட்டிருந்த நிலையில், அவருடன் வந்த 20க்கும் மேற்பட்ட பாமகவினர் அனுமதி மீறி கோயில் உள்ளே செல்ல முயன்றனர். அவர்களை கோயில் ஊழியர்கள் தடுத்தனர். இதையடுத்து, கோயில் ஊழியர்களிடம் பாமகவினர் வாக்குவாதத்தில் ஈடுபட்டதால் பரபரப்பு ஏற்பட்டது.

## சமூக நல்லிணக்கத்தை பாதுகாப்பதில் 100 சதவீதம் உறுதியாக இருப்போம்: விஜய்

சென்னை, டிச.23-

சமூக, சமய நல்லிணக்கத்தை பாதுகாப்பதில் 100 சதவீதம் உறுதியாக இருப்போம் என இன்று நடந்த கிறிஸ்துமஸ் விழாவில் நடிகர் விஜய் பேசினார்.

செங்கல்பட்டு மாவட்டம், மாமல்லபுரத்தில் நடந்த சமத்துவ கிறிஸ்துமஸ் விழாவில் விஜய் பேசியதாவது: இது ஒரு அன்பான தருணம், அழகான தருணம். அன்பும், கருணையும் தானே எல்லாத்துக்கும் அடிப்படை. இது இரண்டும் இருக்கிற மனது தானே தாய் மனசு. நமது தமிழக மண்ணும் அப்படிப்பட்ட ஒரு மண் தானே, தாய் அன்பு கொண்ட மண் தானே. ஒரு தாய்க்கு எல்லா பிள்ளைகளும் ஒன்று தானே? பொங்கல், தீபாவளி, ரம்ஜான், கிறிஸ்துமஸ் என எல்லாம் பண்டிகையும், எல்லோரும் சந்தோஷமாக, ஷேர் பண்ணிக்க கூடிய ஊர் தானே நம்ம ஊர்.

நல்லிணக்கம்

இங்க வாழ்க்கை முறையும், வழிபாட்டு முறையும் வேறு, வேறு என்றாலும் நாம எல்லோரும் சகோதரர்கள் தானே? அதனால் தான் நாம் அரசியலுக்கு வந்த பிறகு, கடவுள் நம்பிக்கை உண்டு என்று அறிவித்தது ஏன் தெரியுமா? உண்மையான நம்பிக்கை தான் நல்லிணக்கத்தை விதைக்கும். மற்றவர்களின் நம்பிக்கையை மதிக்க சொல்லி தர வேண்டும். அப்படிப்பட்ட ஒரு நம்பிக்கை இருந்தால் மட்டுமே போதும், எந்த பிரச்னைகளையும் ஜெயிக்கும். அது மட்டுமல்ல, அப்படிப்பட்ட ஒரு நம்பிக்கையின் வலிமையை பற்றி சொல்வதற்கு பைபிளில் நிறைய கதைகள் இருக்கிறது.

சகோதரர்களே!

அதை படிக்காதவர்கள் படித்து பாருங்கள். குறிப்பாக ஒன்று பற்றி சொல்ல வேண்டும் என்றால், ஒரு இளைஞருக்கு எதிராக, தன்னுடைய சொந்த சகோதரர்களே பொறாமைபட்டு, அவனை பாழும் கிணற்றில் தள்ளிவிட்டனர், அதன் பிறகு அவர் எப்படி மீண்டு வந்து அந்த நாட்டிற்கே அரசன் ஆகி, தனக்கு துரோகம் செய்த சகோதரர்களை மட்டுமல்ல, அந்த நாட்டையே எப்படி காப்பாற்றினார் என்ற கதை பைபிளில் இருக்கிறது. படிக்காதவர்கள் படித்து பாருங்கள்

எதிரிகளைஞ்!

அந்த குறிப்பிட்ட கதை யாரை பற்றிய கதை என்று நான் சொல்லி தெரிய வேண்டிய அவசியம் இல்லை என்று நினைக்கிறேன். அது உங்கள் எல்லோருக்கும் நன்றாக தெரியும். இப்படிப்பட்ட கதைகள் எல்லாம் நமக்கு எதை உணர்த்துகிறது என்றால், கடவுளின் அருளும், மக்களை நேசிக்கிற அன்பும், அதிக வலிமையும், அதற்கான உழைப்பும் இருந்தால் மட்டுமே போதும், எவ்வளவு பெரிய ஒரு போராட்டமோ, போரோ, எதிரிகளையோ ஜெயிக்கலாம். இதை தான் இந்த கதைகள் நமக்கு உணர்த்துகிறது. இந்த விழாவில் ஒரு உறுதியை நான் கொடுக்கிறேன்.

வெற்றி நிச்சயம்

நாமும், தமிழக வெற்றிக்கழகமும் சமூக, சமய நல்லிணக்கத்தை பாதுகாப்பதில் 100 சதவீதம் உறுதியாக இருப்போம். அதில் எந்த விதமான சமரசமும் இருக்கவே இருக்காது. அதனால் தான் நமது கொள்கைகளுக்கு மதசார்பற்ற கொள்கை என்று பெயர் வைத்தோம். கண்டிப்பாக ஒரு ஒளி பிறக்கும்; அந்த ஒளி நம்மை வழிநடத்தும். நம்பிக்கையுடன் இருங்கள்; வெற்றி நிச்சயம். இங்கு வந்து இருக்கும் அனைவருக்கும் கிறிஸ்துமஸ் நல்வாழ்த்துக்கள். அனைத்து புகழும் எல்லா வல்ல இறைவனுக்கே. இவ்வாறு விஜய் பேசினார்




# வேலூர் திருப்பதி தேவஸ்தானத்தில் 7ஜி முரளிதரன் தலைமையில் அன்னதான விழா

வேலூர், டிச.23-

வேலூர் மாவட்டம், வேலூர் அண்ணா சாலை, திருப்பதி தேவஸ்தானத்தில் அனுமன் ஜெயந்தி முன்னிட்டு, நாயுடு சங்கம் தலைவர் 7ஜி.முரளிதரன் தலைமையில், பொதுமக்களுக்கு அன்னதானம் வழங்கும் நிகழ்ச்சி நடைபெற்றது. இதில் சிறப்பு அழைப்பாளராக வேலூர் அரியூர் மலக்கோடி ஸ்ரீ நாராயணி மருத்துவமனை இயக்குனர் என்.பாலாஜி, கலந்து கொண்டு பொதுமக்களுக்கு அன்னதானம் வழங்கினார். மேலும் இந்த நிகழ்ச்சியில் அதிமுக மாவட்ட இலக்கிய அணி செயலாளர் எம்.ஏ.ராஜா, பகுதி கழக இனை செயலாளர் காகிதப்பட்டறை பன்னீர்செல்வம், புனிதன், சாந்தி பேக்கரி அண்ணாச்சி உள்ளிட்ட கட்சி பொறுப்பாளர்கள், நிர்வாகிகள் உறுப்பினர்கள் என பலர் கலந்து கொண்டு அன்னதான விழாவை சிறப்பித்தனர்.





# காட்பாடி அரசு மகளிர் பள்ளியில் டேபிள், பென்ச் பழுது பார்த்து சீரமைத்து, மாவட்ட அளவிலான தச்சு தொழிலாளர்கள் ஒன்றுகூடி சேவைப் பணி “ஒரு நாள் உழைப்பு தானம்”

## சேவை செய்த தச்சு தொழிலாளர்களை தொழிற்சங்கம் கௌரவிப்பு

காட்பாடி, டிச.23-

வேலூர் மாவட்டம், காட்பாடி தாலுகா, காட்பாடி அரசு மகளிர் மேல்நிலைப் பள்ளியில், வேலூர் மாவட்ட தச்சு தொழிலாளர் நல சங்கத்தின் சார்பில், நூற்றுக்கும் மேற்பட்ட தச்சு தொழிலாளர்கள் ஒன்றுகூடி, அரசு பள்ளி மாணவிகளின் நலனுக்காக பள்ளியின் டேபிள் மற்றும் பெஞ்ச் போன்றவற்றைகளை பொழுது பார்த்து சீரமைத்து வழங்கினர். மாவட்ட அளவிலான தச்சு தொழிலாளர்கள் “ஒரு நாள் உழைப்பை தானமாக” வழங்கி சமூக சேவை பணியில் ஈடுபட்டனர். இந்த சேவைப் பணியை பாராட்டி, அச்சங்கத்தின் அகில இந்திய கட்டுமான தொழிற்சங்க மாநில தலைவர் பாலகணேஷ், தச்சு தொழிலாளர்களை பாராட்டி பொன்னாடை போர்த்தி கௌரவித்தனர். இந்த நிகழ்வில் மாநிலத் துணைத் தலைவர் எம்.தங்கராஜ், கிழக்கு பகுதி ஒன்றிய செயலாளர் வேல்முருகன் மற்றும் அமைப்புசாரா நிர்வாகிகள், உறுப்பினர்கள் உள்ளிட்ட பலர் உடனிருந்தனர்.



# சென்னை செயிண்ட் தாமஸ் மவுண்ட் தனியார் மண்டபத்தில் நடைபெற்ற நேஷ்னல் ஐபி யாத்ரா மூலம் தொழில்முனைவோர் பயிற்சிப் பெற்றனர்

சென்னை, டிச.23-

சென்னை ஜிஎஸ்டி சாலை, செயிண்ட் தாமஸ் மவுண்ட் நடைபெற்ற நேஷ்னல் ஐபி யாத்ரா” மூலம் தொழில்முனைவோர் பயிற்சிப் 22 டிசம்பர் மற்றும் 23 டிசம்பர் 2025, தனியார் திருமண மண்டபத்தில் நடைபெறுகிறது

இதில் தொழில் முனைவோர்க்கான வர்த்தக முத்திரைகள், காப்புரிமைகள், பதிப்புரிமை, வடிவமைப்புப் பதிவு செய்வது மற்றும் கண்டறிவது ஆகியவற்றை பற்றியும் மேலும் புதிய தொழில்முனைவோர்கள் தங்கள் விளைபொருட்கள் தயாரிப்புப் பொருட்களை சந்தையில் அறிமுகம் செய்யவும், காட்சி படுத்தவும் தங்கள் தயாரிப்புப் பொருளை புதிய பரிமானத்திற்க்கு கொண்டுசெல்லவும் ஒரு வாய்ப்பாக எம்.எஸ்.எம்.இ தொழில் நுட்ப மேம்பாட்டு மையம்” எனும் “குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில்களுக்கு தொழில்நுட்ப உதவிகள், பயிற்சி மற்றும் மேம்பாட்டு சேவைகளை வழங்கும் மத்திய அரசின் நிறுவனத்தின் கீழ் இயங்கும் செயல்முறை மற்றும் தயாரிப்பு மேம்பாட்டு மையம் பி பி டி சி ஆக்ரா வின், சென்னையில் இயங்கும் “ஐபிஎப்சி சென்னை” இரண்டு நாள் 22 டிசம்பர் மற்றும் 23 டிசம்பர் 2025 அன்று நடத்திய “நேஷ்னல் ஐபி யாத்ரா” வில் 100 க்கும் மேற்பட்ட தொழில்முனைவோர்கள் கலந்துக் கொண்டு “ஐ பி” பதிவு செய்தல், தங்கள் தயாரிப்புப்பொருட்களுக்கு முத்திரை, காப்புரிமை, பதிப்புரிமை, வடிவமைப்புப் பதிவு மற்றும் புவிசார் குறியீடுகளை பெருவதை பற்றிப் பயிற்சி எடுத்துக் கொண்டனர் . இதன் மூலம் அவர்கள் தங்கள் தயாரிப்புப் பொருட்களை அறிவுசார் சொத்துரிமை மூலம் எவ்வாறு காப்பது, புதிய சந்தையை அடைவது, அரசின் உதவி பெருவது, போன்றவற்றை அறிந்தனர் மேலும் 20 ஸ்டால்கள் மூலம் அவர்களின் தயாரிப்புப் பொருட்களை சந்தையில் காட்சி படுத்தினர். இதன் மூலம் அவர்கள் புதிய முதலிட்டாளர்கள் சந்தித்து தங்கள் தொழிலை பெருக்க உதவிகரமாக இருந்தது என்று குறிப்பிடத்தக்கது

# ஊழல் குற்றச்சாட்டிற்கு ஆளான தமிழக அமைச்சர் மீது அமலாக்கத்துறை எடுக்கும் நடவடிக்கைக்கு தமிழக அரசின், முதல்வரும் என்ன எடுக்க போகிறார் என்பதை பொறுத்திருந்து பார்ப்போம்

## காரைக்குடி சட்ட மன்ற தொகுதி வேட்பாளர் தேர்போகி பாண்டி அறிவிப்பு தேவகோட்டையில் டிடிவி தினகரன் பேட்டி




தேவகோட்டை, டிச.23-

சிவகங்கை மாவட்டம் தேவகோட்டையில் காரைக்குடி சட்டமன்ற தொகுதி நிர்வாகிகள் ஆலோசனைக் கூட்டத்தில் கலந்து கொள்ள வந்த, அமமுக பொதுச் செயலாளர் டிடிவி தினகரன் செய்தியாளர்களை சந்தித்தார்.

அப்போது, ஊழல் குற்றச்சாட்டிற்கு ஆளான தமிழக அமைச்சர் மீது அமலாக்கத்துறை எடுக்கும் நடவடிக்கைக்கு தமிழக அரசின், முதல்வர் என்ன எடுக்க போகிறார் என்பதை பொறுத்திருந்து பார்ப்போம்.

அமமுக இடம்பெறும் கூட்டணி தான் ஆட்சி அமைக்கும். கூட்டணி குறித்து பொறுத்திருந்து முடிவெடுப்போம்.

அண்ணாமலை எனது நண்பர். அவருடன் சந்திப்பு நட்பு ரீதியான சந்திப்புதான்.

அமமுக வெற்றியை தீர்மானிக்கும் கட்சியாக உள்ளது.

எங்களது கட்சி கட்டமைப்பு 75 ஆண்டுகால கட்சிக்கும், 50 ஆண்டு கட்சிக்கும் இணையாக அமைந்துள்ளது.

எங்களது கட்சியிலிருந்து வெளியேரியர்களால் கட்சிக்கு எதிர்காலமும், பலம் பெற்றுள்ளது.

வரும் சட்டமன்ற தேர்தலில் அமமுக வேட்பாளர்கள் தமிழக சட்டமன்றத்திற்கு செல்வார்கள்.

வாய்ப்பு கிடைத்தால் கூட்டணி மந்திர சபையில் இடம் பெறுவார்கள்.

புரட்சித்தலைவி அம்மா கொண்டு வந்த தாலிக்கு தங்கம் மடிக்கணினி திட்டங்களை இடையில் நிறுத்தி வைத்தாலும், தவிர்க்க முடியாமல் தேர்தல் காலத்தில் அதனை வழங்குகின்றனர்.

அமமுக கூட்டணிக்கு நிபந்தனை விதிக்கும் கட்சி அல்ல. நட்பு ரீதியான கட்சி. உரிய மரியாதை உள்ள கூட்டணியில் இடம் பெறுவோம்.

அனைத்து தரப்பினர் களுக்கும் திமுக கொடுத்த தேர்தல் வாக்குறுதிகளை நிறைவேற்றவில்லை. பழைய ஓய்வூதிய திட்டத்தை கொண்டு வருவோம், காலி இடங்களை நிரப்புவோம், புதிய வேலை வாய்ப்புகளை உருவாக்குவோம், பகுதி நேர ஆசிரியர்களை நிரந்தரம் ஆக்குவோம் திமுக கொடுத்த வாக்குறுதிகளை நிறைவேற்றவில்லை.

திமுக 200க்கும் மேற்பட்ட தொகுதிகளில் வெற்றி பெறுவோம் என்று கூறுவது, எதிர்க்கட்சிகள் கூட்டணியில் தவறு செய்வார்கள் என்பதால் தான். சிலர் தனக்கு ஒரு கண் போனாலும் பரவா யில்லை மற்றவர்களுக்கு இரண்டு கண்களும் போக வேண்டும். கட்சி தன் கையில் இருந்தால் போதும் திமுக ஆண்டு விட்டு போகட்டும் என சிலர் எண்ணுகின்றனர். காரைக்குடி சட்ட மன்ற தொகுதி வேட்பாளர் தேர்போகி பாண்டி என அறிவித்து அனைவரும் இப்போது இருந்தே தேர்தல் பணிகளை மேற்கொள்ளுங்கள

அமமுக சார்பில் சட்டமன்ற தேர்தலில் போட்டியிட விரும்பும், தொண்டர்கள் நிர்வாகிகள் நாளை முதல் 18ஆம் தேதி வரை விருப்பமானு அளிக்கலாம் என டிடிவி தினகரன் தெரிவித்தார்.

இந்த கூட்டத்திற்கு மாநில இளைஞரணி செயலாளர் இரவுசேரி வழக்கறிஞர் முருகன், கண்ணங்குடி ஒன்றிய சேர்மன், மாநில அம்மா பேரவை இணைச் செயலாளரும், காரைக்குடி சட்ட மன்ற தொகுதி பொறுப்பாளருமான சித்தானூர் சரவணன் மெய்யப்பன், நகர செயலாளரும், நகர்மன்ற உறுப்பினருமான வழக்கறிஞர் கமலகண்ணன், அம்மா பேரவை மாநில இணைச்செயலாளர் மருங்கிப்பட்டி ரமேஷ், மாவட்ட அம்மா பேரவை இணைச் செயலாளர் குமார், மாநில இலக்கிய அணி இணை செயலாளரும், சட்டமன்ற தொகுதி, தேர்தல் பணிக்குழு பொறுப்பாளர் அம்சக்கண்ணன், நகர அம்மா பேரவை செயலாளர் தில்லை ராஜா, கண்ணங்குடி ஒன்றிய செயலாளர் வெங்களூர் செந்தில், தெற்கு ஆசியா வெளிநாடு வாழ் தமிழர் நல பிரிவு மண்டல செயலாளர் சித்தானூர் டாக்டர் செல்வநாதன், மாவட்ட வர்த்தக அணி இணைச் செயலாளர் கல்லூரணி பாலாஜி, நகர் மன்ற உறுப்பினர் கோமதிபெரியகருப்பன் மற்றும் நிர்வாகிகள் வரவேற்பு ஏற்பாடுகளை செய்தனர்.

நகர் மன்ற உறுப்பி னர்கள் நித்யா குமார், கோமதி பெரியக ருப்பன், தனலெட்சுமி நல்லூப் பாண்டி, விக்னேஷ்வரி, நகர கழக துணைச்செயலாளர் கார்த்திக், அம்மா தொழிற்சங்க பேரவை மகேஷ் மற்றும் கழக நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.







விடுதலை சிறுத்தை கட்சியின் கிறிஸ்தவ சமூக நீதிப் பேரவை சார்பாக

# ஏழை எளிய மக்களுக்கு நலத்திட்ட உதவிகள் வழங்கும் விழா

தாம்பரம், டிச.23-

செங்கல்பட்டு மாவட்டம் தாம்பரத்தில் உள்ள தனியார் திருமண மண்டபத்தில் விடுதலை சிறுத்தை கட்சியின் தாம்பரம் மாநகர மாவட்ட செயலாளர் பொறியாளர் சாமுவேல் எபிநேச தலைமையில் கிறிஸ்மஸ் விழா மிக பிரம்மாண்டமாக கொண்டாடப்பட்டது இதில் சிறப்பு அழைப்பாளராக விடுதலை சிறுத்தை கட்சியின் ஊடக மையம் முதன்மைச் செயலாளரும் செய்யூர் சட்டமன்ற உறுப்பினருமான பனையூர் பாபு கலந்துகொண்டு கேக் வெட்டி ஏழை எளிய மக்களுக்கு நலத்திட்ட உதவிகள் வழங்கினார் இதில் விடுதலை சிறுத்தை கட்சியின் நிர்வாகிகள் மாநிலத் துணைச் செயலாளர் தாம்பரம் கதிரவன், நகர செயலாளர்கள் ராமானுஜம் மற்றும் ஆதி சாலமன் மற்றும் நகர பொருளாளர் பொறியாளர் அமித் ராஜ் உள்ளிட்ட ஏராளமான கட்சி நிர்வாகிகள் கலந்து கொண்டு நிகழ்ச்சியை சிறப்பித்தனர்.

மேலும் இந்த நிகழ்ச்சியில் சிறப்பு அழைப்பாளராக மதச்சார்பற்ற முற்போக்கு கூட்டணியின் கட்சியை சார்ந்த தாம்பரம் சட்டமன்ற உறுப்பினர் எஸ்.ஆர். ராஜா, மனிதநேய மக்கள் கட்சியின் துணைப் பொதுச் செயலாளர் தாம்பரம் மாநகராட்சி மாமன்ற உறுப்பினர் யாகூப், தாம்பரம் மேயர் வசந்தகுமாரி தாம்பரம் மண்டல குழு தலைவர் காமராஜ் உள்ளிட்ட கூட்டணி கட்சி சார்ந்து முன்னணி நிர்வாகிகள் மற்றும் மத போதகர்கள் உள்ளிட்ட ஏராளமான நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.



■ கடலூர், மஞ்சக்குப்பம் அரசு மாதிரி பள்ளி கட்டிடத்தினை கடலூர் சட்டமன்ற உறுப்பினர் கோ.ஐயப்பன், மாநகராட்சி மேயர் சுந்தரிராஜா ஆகியோர் குத்துவிளக்கேற்றி மாணவர்களின் பயன்பாட்டிற்கு தொடங்கி வைத்தனர். உடன் மாநகராட்சி துணைமேயர் பா.தாமரைச்செல்வன், மாவட்ட ஊரக வளர்ச்சி முகமையின் கூடுதல் ஆட்சியர் ர.அ.பிரியங்கா மாவட்ட முதன்மை கல்வி அலுவலர் ரமேஷ் உட்பட பலர் உள்ளனர்.




# 100 நாள் வேலை திட்டத்திப்பெயர் மாற்றம் காங்கிரஸ் கட்சி சார்பில் பாஜக அரசை கண்டித்து தேனியில் ஆர்ப்பாட்டம்

தேனி, டிச.23-

மகாத்மா காந்தி ஊரக வேலைவாய்ப்புத் திட்டப் பெயர் மாற்றத்திற்கு எதிர்ப்பு: தேனியில் காங்கிரஸ் கட்சியினர் பாஜக அரசைக் கண்டித்து ஆர்ப்பாட்டம்

தேனி பழைய பேருந்து நிலையம் அருகே காங்கிரஸ் கட்சி சார்பில் மத்தியில் ஆளும் பாஜக அரசு மகாத்மா காந்தி ஊரக வேலைவாய்ப்புத் திட்டத்தின் பெயரை மாற்றியமை த்ததை கண்டித்து ஆர்ப்பாட்டம் நடைபெற்றது.

இந்த ஆர்ப்பாட்டம் காங்கிரஸ் தேனி மாவட்ட தலைவர் கூடலூர் முருகேசன் தலைமை யிலும் ,பொருளாளர் அப்பு என்ற பாலசுப்பிரமணி முன்னிலையில் நடைபெற்றது. இந்த ஆர் பாட்டத்தில் மத்தியில் காங்கிரஸ் கட்சி ஆளும் போது பொது மக்களுக்காக பல்வேறு திட்டங்கள் செயல்படுத்தி வந்தது. அந்த திட்டங்களுக்கு சுதந்திர போராட்டத்தில் ஈடுபட்ட தலைவர்களின் பெயர் வைத்து செயல்படுத்தி வந்த நிலையில் தற்போது மத்தியில் ஆளும் பாஜக அரசானது அந்த திட்டங்களின் பெயரை மாற்றி வருகிறது.அதே போல் காங்கிரஸ் கட்சி சார்பில் ஏழை எளிய மக்கள் பயன்பெறும் வகையில் 100 நாள் வேலை வாய்ப்பு திட்டத்தினை ஆரம்பித்து அந்த திட்டத்திற்கு மகாத்மா காந்தி பெயரை வைத்து செயல்படுத்தி வந்தது . ஆனால் மகாத்மா காந்தியின் பெயரை நீக்கிவிட்டு புதிய மசோதா நிறைவேற்றபட உள்ளதை கண்டித்து கோசங்களை எழுப்பி ஆர்ப்பாட்டம் நடைபெற்றது.




# “தேசிய மாணவர் படை பிரிவு தொடக்க விழா”

சிவகங்கை, டிச.23-

சிவகங்கை மாவட்டம் காரைக்குடி தாலுகா, கோவிலூரில் உள்ள நாச்சியப்ப சுவாமிகள் கலை மற்றும் அறிவியல் கல்லூரியில், புதிதாக தேசிய மாணவர் படை பிரிவு உருவாக்கப்பட்டுள்ளது. அதனை முன்னிட்டு, 22.12.2025 அன்று “தேசிய மாணவர் படை பிரிவு தொடக்க விழா” நிகழ்ச்சி சிறப்பாக நடந்தேறியது.

கோவிலூர் கல்வி நிறுவனங்களின் செயலர், சீர் வளர் சீர் நாராயண ஞான தேசிக சுவாமிகள் ஆசியுரை வழங்கினார், தாளாளர் முனைவர். M.வீரப்பன் தலைமையுரை ஆற்றினார். கல்லூரியின் முதல்வர் மற்றும் கணினியியல் துறைத் தலைவர் முனைவர். K.கலா வரவேற்புரை யாற்றினார். கல்லூரியின் கல்வி ஆலோசகர் முனைவர் சந்திர மோகன் பாரட்டுரையாற்றினார். தமிழ்நாடு ஒன்பதாவது பட்டாலியன் என்.சி.சி காரைக்குடியின், கட்டளை அதிகாரி, லெப்டினன்ட் கர்னல், சிபி தாமஸ் சிறப்பு விருந்தினராகக் கலந்து கொண்டு சிறப்புரையாற்றினார். தனது சிறப்புரையில் ‘மாணவர்கள் தங்களது கனவுகளை நினைவாக்க, கனவு களை நோக்கி நேர்மையு டனும், ஒழு க்கத்துடனும் பயணிக்க வேண்டும்‘ என்று வலியுறுத்தினார்.நிகழ்ச்சி யின் நிறைவா கல்லூரியின் துணை முதல்வர் மற்றும் வணிகவியல் துறைத் தலைவர் சீதாலட்சு மிநன்றியுரை வழங்கினார்.



## உழவர் பெருந்தலைவர் நாராயணசாமி நாயுடு 41 ஆம் ஆண்டு நினைவு தினத்தை முன்னிட்டு கோவை வையம்பாளைத்தில் உள்ள அவரது மணிமண்டபத்தில் நினைவுதினம் அனுசரிப்பு

கோவை, டிச.23-

கோவை வையம்பாளையம் கிராமத்தில் உள்ள உழவர் பெருந்தலைவர் நாராயணசாமி நாயுடு மணிகண்டபத்திற்கு காலை முதலே தமிழகமுழுவதுமிருந்து ஏராளமான விவசாயிகள் விவசாய சங்கத்தினர் மற்றும் பல்வேறு அரசியல் கட்சியினர் வருகை புரிந்தனர்....

தொடர்ந்து உழவர் பெருந் தலைவர் நாராயணசாமி நாயுடுவின் தமிழக விவசாயிகள் சங்கம் மாநில தலைவர் வேலுச்சாமி தலைமையில் நினைவிடத்தில் மலர்வளையம் வைத்து மலர்தூவி அஞ்சலி செலுத்தினர்...

இது குறித்து மாநில தலைவர் வேலுச்சாமி கூறுகையில் விவசாயிகளுக்காக எண்ணற்ற தியாகங்களை செய்தவர் நமது உழவர் பெருந்தலைவர் எனவே அவரது நினைவு நாளை அனுசரிக்கும் வகையில் நாங்கள் அஞ்சலி செலுத்தினோம். பால் கொள்முதல் விலையை 15 ரூ உயர்த்தக்கோரி பல முறை கோரிக்கை வைத்தும் பலனில்லை எனவே வரும் 29 ஆம் தேதி கால்நடைகளுடன் மறியல் போராட்டத்தில் ஈடுபட உள்ளதாக தெரிவித்தார்...

இந்நிகழ்வில் மாநில பொதுச்செயலாளர் .கி.மோகன் குமார் மற்றும் மாநில துணைத் தலைவர் K.ராஜாபெருமாள், திருப்பத்தூர் G.K.கணதி, சேலம் மாவட்ட தலைவர் E.S.M.ஏழுமலை மற்றும் மாநில மாவட்ட சங்க நிர்வாகிகள் பொறுப்பாளர்கள் உறுப்பினர்கள் மற்றும் விவசாயிகள் உட்பட ஏராளமானோர் கலந்து கொண்டனர்...



## தேனி மாவட்ட ஆட்சித்தலைவர் தலைமையில் நடைபெற்ற மக்கள் குறைதீர்க்கும் நாள் கூட்டத்தில் 331 கோரிக்கை மனுக்கள் பெறப்பட்டது

தேனி, டிச.23-

தேனி மாவட்ட ஆட்சித்தலைவர் அலுவலகத்தில் நடைபெற்ற மக்கள் குறைதீர்க்கும் நாள் கூட்டத்தில் 331 கோரிக்கை மனுக்களை மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.ரஞ்ஜீத் சிங், இ.ஆ.ப., அவர்கள் பொதுமக்களிடமிருந்து பெற்றுக் கொண்டார்.

இக்கூட்டத்தில் முதியோர் உதவித்தொகை, புதிய வீட்டுமனைப் பட்டா, வேலைவாய்ப்பு மற்றும் இதர மனுக்கள் என மொத்தம் 331 கோரிக்கை மனுக்களை பெற்றுக்கொண்ட மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள், பொதுமக்களின் கோரிக்கை மனுக்களை சம்மந்தப்பட்ட துறை அலுவலர்களிடம் வழங்கி மனுக்கள் மீது குறித்த காலத்திற்குள் விரைந்து நடவடிக்கை மேற்கொள்ளுமாறு உத்தரவிட்டார்.

இக்கூட்டத்தில், மாவட்ட பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத்துறையின் சார்பில் 5 பயனாளிகளுக்கு ரூ.43,905/ மதிப்பிலான விலையில்லா தேய்ப்பு பெட்டிகளையும், 6 பயனாளிகளுக்கு ரூ.31,218/ மதிப்பிலான விலையில்லா தையல் இயந்திரங்களையும் மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் வழங்கினார்.

இக்கூட்டத்தில் மாவட்ட வருவாய் அலுவலர் ப.ராஜகுமார், மாவட்ட ஆட்சியரின் கூடுதல் நேர்முக உதவியாளர் (நிலம்) திரு.கதிர்வேல், மாவட்ட பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நல அலுவலர் திருமதி கவிதா உட்பட அரசு அலுவலர்கள் பலர் கலந்து கொண்டனர்.



## தென்காசி மாவட்ட ஆட்சியர் அலுவலக கூட்டரங்கில் மாவட்ட ஆட்சித்தலைவர் ஏ.கே.கமல்கிஷோர் மக்கள் குறைத்தீர்க்கும் நாள் கூட்டம்

தென்காசி, டிச.23-

தென்காசி மாவட்ட ஆட்சியர் அலுவலக கூட்டரங்கில் மாவட்ட ஆட்சித்தலைவர் ஏ.கே. கமல்கிஷோர் மக்கள் குறைத்தீர்க்கும் நாள் கூட்டத்தில் பொது மக்கள் மற்றும் மாற்றுத்திறனாளிகளிடம் கோரிக்கை மனுக்களை பெற்று மனுக்கள் மீது உடனடியாக நடவடிக்கை மேற்கொள்ள அலுவலர்களுக்கு அறிவுறுத்தினார்.

இக்கூட்டத்தில் இலவச வீட்டுமனை பட்டா, முதியோர் உதவித்தொகை, அடிப்படை வசதிகள் ஏற்படுத்தி தரக்கோருதல், பட்டா மாறுதல், மாற்றுத் திறனாளிகள் உதவித்தொகை மற்றும் இதர மனுக்கள் என மொத்தம் 646 மனுக்கள் பெறப்பட்டது. பெறப்பட்ட மனுக்கள் தகுதி வாய்ந்த மனுக்களாக உள்ளதா என்பதை விசாரணை செய்து விரைந்து நடவடிக்கை மேற்கொண்டு மனுதாரர்களுக்கு உரிய பதில் அளிக்குமாறு சம்பந்தப்பட்ட அனைத்து துறை அலுவலர்களுக்கும் மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் அறிவுறுத்தினார்.

முன்னதாக கால்நடை பராமரிப்புத்துறை சார்பில் கால்நடை பண்ணைத்தொழில் அமைப்பது குறித்து 20 நாட்கள் நடைபெற்ற திறன் மேம்பாட்டு பயிற்சியில் பங்கு பெற்ற 23 விவசாயிகளுக்கு திறன் மேம்பாட்டு பயிற்சி பெற்றமைக்கான சான்றிதழ்களை மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.ஏ.கே. கமல்கிஷோர், இ.ஆ.ப., அவர்கள் வழங்கினார்.

இக்கூட்டத்தில், மாவட்ட வருவாய் அலுவலர் திரு.சீ.ஜெயச்சந்திரன், கால்நடை பராமரிப்புத்துறை மண்டல இணை இயக்குநர் மரு.ஆ.கோயில்ராஜா, தனித்துணை ஆட்சியர் (ச,பா.தி) திரு.நம்பிராயர் மற்றும் அனைத்து துறை அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

## வேலூர் மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் மாவட்ட வருவாய் அலுவலரிடம், த.வெ.க. கட்சியின் இணை செயலாளர் சீனிவாசன், தலைமையில் கோரிக்கை மனு

### குடிநீர் வசதி, தெரு விளக்கு வசதி மற்றும் குப்பைகள் அகற்ற போன்ற அடிப்படை வசதிகள் செய்து தர கோரிக்கை

வேலூர், டிச.23-

வேலூர் மாவட்டம், வேலூர் தாலுகா, சத்துவச்சாரி, மாவட்ட ஆட்சியர் அலுவலகம் காயிதே மில்லத் கூட்ட அரங்கில், மக்கள் குறைதீர்வு நாள் கூட்டம் மாவட்ட வருவாய் அலுவலர் மா,சிவசுப்பிரமணியன் தலைமையில் நடைபெற்றது. இதில் மாவட்ட ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை அலுவலர் எஸ்.ஆர்.என்.மதுசெழியன், மாவட்ட வட்ட வழங்கல் அலுவலர் சரவணன், சமூக நல பாதுகாப்பு திட்ட தனி (துணை ஆட்சியர்) மாறன், ஆகியோர் கலந்து கொண்டனர். இக்கூட்டத்தில் பொதுமக்கள் தங்களுடைய கோரிக்கைகளை மனுக்களாக அளித்தனர். இதில் தமிழக வெற்றிக்



கழகம் சார்பில் மாவட்ட இணைச் செயலாளர் சீனிவாசன் மற்றும் த.வெ.க நிர்வாகிகள் அளித்துள்ள மனுவில் கூறியிருப்பதாவது: மாநகராட்சி 4 வது, மண்டலம் 51 வது வார்டில் அமைந்துள்ள மெயின் சாலையில் கடந்த சில நாட்களுக்கு முன்பு நடந்த விபத்தில் பள்ளி மனைவி உயிரிழந்தார். அந்த பகுதியில் அடிக்கடி விபத்துக்கள் நடப்பது தொடர்கதையாக உள்ளது. எனவே அந்த பகுதியில் வேகத்தடை அமைத்து விபத்துகளை தடுக்க நடவடிக்கைகள் எடுக்க வேண்டும் எனவும். மேலும் பகதூர்ஷா 4வது குறுக்கு தெருவில் 100க்கும் மேற்பட்ட குடும்பத்தினர் வசித்து வருகின்றனர். அங்கு குடிநீர் வசதி இல்லாமல் அவதிப்படுகின்றனர் அங்கு குடிநீர் வசதி ஏற்படுத்திக் கொடுக்க வேண்டும். மேலும் அங்குள்ள குப்பை கிடங்கை அகற்றவும் நடவடிக்கை எடுக்க வேண்டும். இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது. மாவட்ட செயலாளர் பிரசாந்த், மண்டல ஒருங்கிணைப்பாளர் வழக்கறிஞர் சுரேஷ், மாவட்ட ஒருங்கிணைப்பாளர் வழக்கறிஞர் மாரஸ் காரல் மார்க்ஸ், பகுதி செயலாளர் கார்த்தி, சுரேஷ் பீந்தூர் மாவட்ட செயற்குழு உறுப்பினர் பேபி லட்சுமி, மாவட்டம் மகளிர் அணி இணை செயலாளர் ஷமஷாத், 51,வது வட்ட தவெக செயலாளர் கார்த்திக் குமார், உள்ளிட்ட மாவட்ட மாநகர பகுதி த,வெ,க, நிர்வாகிகள் பொதுமக்கள் உட்பட பலர் புரிந்து கோரிக்கை வைத்துள்ளனர்.





■ காஞ்சி வடக்கு மாவட்டம் புனித தோமையார் மலை வடக்கு ஒன்றியம் மதுரம்பாக்கம் ஊராட்சியில் உள்ள 425,426,427 பாகங்களில் மாவட்ட பிரதிநிதி மதுரபாக்கம் ஊராட்சி மன்ற துணை தலைவர் டி.புருஷோத்தமன் அவர்களின் தலைமையில் என் வாக்குச்சாவடி வெற்றி வாக்குச்சாவடி கூட்டம் நடைபெற்றது இக்கூட்டத்தில் புனித தோமையார் மலை வழக்கு ஒன்றிய செயலாளர் ஜி.கே.விவேகானந்தன் (எ) ரவி அவர்கள் கலந்து கொண்டு சட்டமன்ற தேர்தலில் எவ்வாறு செயல்பட வேண்டும் என்று ஆலோசனைகள் வழங்கினார் இதில் காஞ்சிபுரம் வடக்கு புனித தோமையார் மலை வடக்கு ஒன்றியம் விளையாட்டு மேம்பாட்டு அணி அமைப்பாளர் கோவிலாஞ்சேரி கு.ஜீவா மற்றும் ஒன்றிய அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள் , கழக நிர்வாகிகள் அனைவரும் கலந்து கொண்டு சிறப்பித்தனர்



## கோவை மாவட்டம், சர்க்கார் சாமகுளம் ஒன்றிய சார்பாக திமுக மாபெரும் நலத்திட்டங்கள் வழங்கும் விழா

கோவை, டிச.23-

கோவை மாவட்டம், சர்க்கார் சாமக்குளம் ஒன்றியம், கோவில்பாளையம் பகுதியில் தமிழ்நாடு துணை முதலமைச்சரும் மாநில திமுக இளைஞரணி செயலாளருமான உதயநிதி ஸ்டாலினின் பிறந்த நாளை முன்னிட்டு சர்க்கார் சாமக்குளம் ஒன்றிய கழகம் சார்பாக, மாபெரும் நலத்திட்ட உதவிகள் வழங்கும் விழா மற்றும் பொதுக்கூட்டம் நடைபெற்றது. விழாவிற்கு ஒன்றிய கழகச் செயலாளர் எஸ்.பி.சுரேஷ்குமார் தலைமை வகித்தார். இவ்விழாவில் சிறப்பு விருந்தினராக முன்னாள் அமைச்சரும் திமுக கொங்கு மண்டல பொறுப்பாளருமான வி.செந்தில் பாலாஜி கலந்து கொண்டு ரூபாய்.36 இலட்சம் மதிப்பீட்டிலான 2081 பயனாளிகளுக்கு நலத்திட்டங்கள் வழங்கி சிறப்பித்தார். இதில் தையல் இயந்திரம், மடிக்கணினி, மாற்றுத் திறனாளி சக்கர நாற்காலி, விவசாயிகளுக்கு பவர் ஸ்ப்ரேயர், கல்வி உதவித்தொகை, பொற்கிலி, விளையாட்டு உபகரணங்கள், உயிர் காக்கும் தலைக்கவசம் ஆகியவைகள் வழங்கப்பட்டது. மாவட்ட செயலாளர் தொ.அ.ரவி, மாநில மாணவரணிச் செயலாளர் இரா. ராஜீவ்காந்தி, தொகுதி பொறுப்பாளர் மூலனூர் கார்த்தி, மாவட்டத் துணைச் செயலாளர்கள் அசோக் பாபு, எம்.என்.கே செந்தில் ஆகியோர் முன்னிலை வகித்தார்கள்.



## வளர்ச்சித் திட்டப்பணிகளை மாவட்ட ஆட்சித்தலைவர் சிம்ரன்ஜீத் சிங் காலோன் பார்வையிட்டு ஆய்வு

இராமநாதபுரம், டிச.23-

இராமநாதபுரம் மாவட்டம், திருப்புல்லாணி ஊராட்சி ஒன்றியத்தில் ஊரக வளர்ச்சித்துறையின் மூலம் மேற்கொள்ளப்பட்டு வரும் வளர்ச்சித் திட்டப்பணிகளை மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சிம்ரன்ஜீத் சிங் காலோன்,இ.ஆ.ப., அவர்கள் பார்வையிட்டு ஆய்வு செய்தார்.

இந்த ஆய்வின்போது மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் திருப்புல்லாணி ஊராட்சி ஒன்றியம், திருப்புல்லாணியில் மகளிர் சுய உதவிக் குழு சேவை மைய கட்டிடம் மற்றும் கலைஞரின் கனவு இல்லம் கட்டடம் கட்டப்பட்டு வருவதையும் பார்வையிட்டு பணிகளை உரிய காலத்திற்குள் முடிக்க அறிவுறுத்தினார். அதனைத் தொடர்ந்து தேத்தாங்கால் ஊராட்சியில் சாலை விரிவுப்படுத்தி சீரமைக்கும் பணி நடைபெற்று வருவதையும் பார்வையிட்டு ஆய்வு செய்தார். அதன் பின்னர் கோதக்கோட்டை ஊராட்சியில் சமத்துவபுரத்தில் உள்ள குடியிருப்பு பகுதியில் உள்ள வீடுகள் சீரமைப்பு பணி மேற்கொள்ளப்பட்டு வருவதையும் பார்வையிட்டு ஆய்வு செய்தார்.

அதனைத் தொடர்ந்து தேத்தாங்கால்; ஊராட்சியில் ஊராட்சி ஒன்றிய துவக்கப்பள்ளி சீரமைக்கப்பட்டுள்ளதை பார்வையிட்டு ஆய்வு செய்ததுடன், அங்கன்வாடி மையத்தை பார்வையிட்டு ஆய்வு செய்தார்.

பின்னர் அரியனேந்தல் ஊராட்சியில் உள்ள அங்கன்வாடி மையத்திற்கு சென்று குழந்தைகளுக்கு வழங்கவுள்ள உணவுப் பொருட்களை சாப்பிட்டு தரம் குறித்து ஆய்வு செய்ததுடன், நாள்தோறும் குழந்தைகளுக்கு சுகாதாரமான முறையில் உணவு வழங்கிட பணியாளர்களுக்கு மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சிம்ரன்ஜீத் சிங் காலோன்,இ.ஆ.ப., அவர்கள் அறிவுறுத்தினார்.

இந்த ஆய்வில் திருப்புல்லாணி வட்டார வளர்ச்சி அலுவலர் திருமதி.இராஜேஸ்வரி அவர்கள் மற்றும் அரசு அலுவலர்கள் உட்பட பலர் கலந்து கொண்டனர்.



## இராமநாதபுரம் மாவட்ட ஆட்சியர் அலுவலக கூட்டரங்கில் மாவட்ட ஆட்சித்தலைவர் சிம்ரன்ஜீத் சிங் காலோன் தலைமையில் மக்கள் குறைதீர்க்கும் நாள் கூட்டம்

இராமநாதபுரம், டிச.23-

இராமநாதபுரம் மாவட்ட ஆட்சியர் அலுவலக கூட்டரங்கில் மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சிம்ரன்ஜீத் சிங் காலோன்,இ.ஆ.ப., அவர்கள் தலைமையில் மக்கள் குறைதீர்க்கும் நாள் கூட்டம் நடைபெற்றது. இக்கூட்டத்தில் மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் பொதுமக்களிடம் பல்வேறு கோரிக்கைகள் குறித்த 354 மனுக்கள் பெற்று மனுதாரரின் முன்னிலையில் மனுக்களை விசாரணை செய்து தொடர்புடைய அலுவலர்களிடம் மனுக்களை வழங்கி உரிய நடவடிக்கையினை விரைந்து மேற்கொள்ள அலுவலர்களுக்கு உத்தரவிட்டார்.

இக்கூட்டத்தில் வீட்டுமனை பட்டா, முதியோர் உதவித்தொகை, தனிநபர் வீடு வழங்கும் திட்டம், குடிநீர் இணைப்பு வழங்குதல் உள்ளிட்டவை தொடர்பாக பொதுமக்கள் மனுக்களை அளித்தனர். மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் தெரிவிக்கையில், ஒவ்வொரு வாரமும் பொது மக்களிடம் பெறக்கூடிய மனுக்களுக்கு உரிய நடவடிக்கை மேற் கொண்டு ஒருமாத காலத்திற்குள் மனுதாரர்களுக்கு உரிய தீர்வு வழங்கிட வேண்டும் எனவும், தீர்வு வழங்க முடியாத மனுக்கள் நிலை குறித்து மனுதாரர்களிடம் அலுவலர்கள் எடுத்துரைக்க வேண்டும் எனவும் அலுவலர்களுக்கு அறிவுறுத்தினார். மேலும் பொதுமக்கள் வழங்கும் மனுக்களுக்கு துறைசார்ந்த அலுவலர்கள் சிறப்பு கவனம் எடுத்து செயல்பட வேண்டுமென மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் தெரிவித்தார்.

தொடர்ந்து மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சரின் பொது நிவாரண நிதியின் கீழ் ஆர்.எஸ்.மங்கலம் வட்டம், மேலச்செங்குடி கிராமத்தை சேர்ந்த திரு.அம்மாசி அவர்களின் மகள் ஐஸ்வர்யா என்பவர் கண்மாயில் நீரில் மூழ்கி இறந்தமைக்காக ரூ.1,00,000 க்கான காசோலையினையும், சடையன்வலசை கிராமத்தை சேர்ந்தமுனீஸ்வரி அவர்களின் கணவர் கர்ணன் அவர்கள் மின்சாரம் தாக்கி இறந்ததையொட்டி அவர்களின் குடும்பத்துக்கு நிவாரண நிதியான ரூ.1,00,000 க்கான காசோலையினை மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சிம்ரன்ஜீத் சிங் காலோன் வழங்கினார்.

இக்கூட்டத்தில் மாவட்ட வருவாய் அலுவலர் திரு.வ.சங்கரநாராயணன் அவர்கள், மாவட்ட சமூக பாதுகாப்புத்திட்ட தனித்துணை ஆட்சியர் திருமதி.கிருஷ்ணகுமாரி அவர்கள், நேர்முக உதவியாளர் (நிலம்) திரு.ரகுபதி அவர்கள், உதவி ஆணையர் (கலால்) திருமதி.கங்காதேவி அவர்கள் மற்றும் அரசு அலுவலர்கள் உட்பட பலர் கலந்து கொண்டனர்.



## துணை முதல்வர் கூட்டுறவுத்துறை அமைச்சர் பிறந்தநாள் விழா

சிவகங்கை, டிச.23-

தமிழ்நாடு துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலினின் 49வது பிறந்தநாள் மற்றும் கூட்டுறவுத்துறை அமைச்சர் கே ஆர் பெரிய கருப்பன் பிறந்தநாள் விழாவை முன்னிட்டு சிவகங்கை திமுக மாவட்ட மாணவரணி துணை அமைப்பாளர் வழக்கறிஞர் ராஜ அமுதன் ஏற்பாட்டில் மாபெரும் கிரிக்கெட் போட்டி சிவகங்கை மன்னர் அரசு கலைக் கல்லூரியில் கடந்த இரு தினங்களாக நடைபெற்றது. பல்வேறு மாவட்டங்களை சேர்ந்த வீரர்கள் பங்கேற்றனர் . இப்போட்டியில் முதலாம் பரிசு தொகையை 20,025/ ரூபாயை ராஜா அமுதன் பிரதர்ஸ் அணியினரும் , இரண்டாம் பரிசுத்தொகையினை 15,025/ கே சி சி அணியினரும், மூன்றாம் பரிசு தொகையை 10,025/ காளையார் கோயில் விஎம் ஸ்பாட் அணியினரும் பெற்றனர். சிவகங்கை நகர் மன்ற தலைவர் துரை ஆனந்த மற்றும் சிவகங்கை நகர் காவல் ஆய்வாளர் சிவசுப்பிரமணியன் ஆகியோர் வெற்றி பெற்ற வீரர்களுக்கு கோப்பையை வழங்கி பாராட்டினார்.





## சிவகங்கையில் 4 ஆவது நாளாக தொடரும் செவிலியர் போராட்டம்

சிவகங்கை, டிச.23-

சிவகங்கை மருத்துவக் கல்லூரி மருத்துவமனை வளாகத்தில் பணி நிரந்தரம் உள்ளிட்ட பல்வேறு கோரிக்கைகளை வலியுறுத்தி, நேற்று முன்தினம் (21.12.2025) 4 ஆவது நாளாகக் காத்திருப்பு போராட்டத்தில் செவிலியர்கள் ஈடுபட்டனர்.இந்த ஆர்ப்பாட்டம் மாவட்ட நிர்வாகிகள் தோழர் இரஞ்சிதா, தோழர் இராம்பிரியா ஆகியோர் தலைமையில் நடைபெற்றது. போராட்டத்தை தொடங்கி வைத்து அரசு ஊழியர் சங்கத்தின் மாவட்ட செயலாளர் இராதாகிருஷ்ணன் பேசினார்

மாவட்ட நிர்வாகிகள் தோழர் தமிழரசி, தோழர் கிரேசி, தோழர் சௌமியன், தோழர் இராஜீவ் காந்தி ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

சென்னையில் கடந்த 18 ஆம் தேதி முதல் போராடிவரும் செவிலியர்களின் மாநில தலைமையை அரசு உடனடியாக அழைத்துப் பேசி கோரிக்கைகளை தீர்க்க வேண்டும் என வலியுறுத்தி தமிழகம் முழுவதும் மருத்துவக் கல்லூரிகளில் அல்லது மருத்துவமனைகளில் போராட்டம் தொடர்கிறது.

இப்போராட்டம் குறித்து மாவட்ட தலைவர் தோழர் கிறிஸ்டி பொன்மணி கூறியதாவது, பணி நிரந்தர உள்ளிட்ட கோரிக்கைகளை வலியுறுத்தி தமிழகம் முழுவதும் நடைபெறும் குறிப்பாக, தலைநகரில் போராடுகிற பெண் செவிலியர்களுக்கு, பல்வேறு நெருக்கடிகளை மறைமுகமாக, கொடுத்து வருகிறது. எப்படிப்பட்ட நெருக்கடிகள் கொடுத்தாலும் நாங்கள் போராட்டத்தை கைவிட மாட்டோம். எங்கள் தலைவர்களை அழைத்து பேசி எங்கள் கோரிக்கைகளை அரசு தீர்த்து வைக்க வேண்டும். அதுவரை நாங்கள் காத்திருப்பு போராட்டத்தில் ஈடுபடுவோம், எனத் தெரிவித்தார்

போராட்டத்தில் தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கத்தின் மாவட்ட தலைவர் தோழர் மாரி, மாவட்ட பொருளாளர் தோழர் கலைச்செல்வி, மாவட்ட இணைச் செயலாளர் இராஜா முகமது, தமிழ்நாடு சத்துணவு ஓய்வுதியர் சங்கத்தின் மாநில செயலாளர் பாண்டி, தமிழ்நாடு சத்துணவு ஊழியர் சங்கத்தின் மாவட்ட பொருளாளர் நாகராணி, தமிழ்நாடு ஊரக வளர்ச்சி துறை அலுவலர்கள் சங்கத்தின் மாவட்ட இணைச் செயலாளர் கலைச் செல்வம், தமிழ்நாடு பிற்பட்டோர் நலத்துறை விடுதி ஊழியர் சங்கத்தின் மாவட்ட தலைவர் கோபால் ஆகியோர் கலந்து கொண்டு வாழ்த்துரை வழங்கினர். போராட்டத்திற்கு அரசு செவிசாய்த்து கோரிக்கையை நிறைவேற்றுமா? என்று பொறுத்திருந்துதான் பார்க்க வேண்டும்



■ வேலூர் மாவட்ட தச்சு தொழிலாளர் நல சங்கம் சார்பில் காட்பாடி அரசு பெண்கள் மேல்நிலைப் பள்ளியில் நூற்றுக்கும் மேற்பட்ட தச்சு தொழிலாளர்கள் அரசு பள்ளி மாணவிகளுக்காக தங்களின் "ஒரு நாள் உழைப்பை தானமாக" வழங்கியதற்கு அச்சங்கத்தின் அகில இந்திய கட்டுமான தொழிற்சங்க மாநில தலைவர் பாலகணேஷ் தச்சு தொழிலாளர்களுக்கு சால்வை அணிவித்து கௌரவப்படுத்தினார். இதில் மாநிலத் துணைத் தலைவர் எம்.தங்கராஜ் கிழக்கு பகுதி ஒன்றிய செயலாளர் வேல்முருகன் உட்பட மற்றும் சங்க உறுப்பினர்கள் பலர் கலந்து கொண்டனர்.



தேவகோட்டையில் முருகன் மாநாடு ராம் நகர் கந்த சஷ்டி கழகம் சார்பில் முருகன் கோயில்களை ஒன்றி ணைத்து முருக பக்தர்கள் மாநாடு நடைபெற்றது

தேவகோட்டை, டிச.23-

சிவகங்கை மாவட்டம் தேவகோட்டை ராம் நகர் கந்த சஷ்டி கழகம் சார்பாக முருக பக்தர்கள் வேல் எடுத்துச் சென்று தேவகோட்டை நகரில் உள்ள ஆறு முருகன் கோவிலில் சிறப்பு பூஜை செய்யப்பட்டன. தண்டாயுதபாணி மலைக் கோயில், தி.ராம., சாமி கோயில்,அழகிய சுந்தரவேலாயுத் தண்டாயுத பாணி கோயில், வெற்றி வேல் முருகன் கோயில், கல்யாண சுப்பிரமணிய சுவாமி கோயில் ஆகிய ஆறு கோயில்களுக்கு சென்று அங்குள்ள முருக பெருமானை பூஜை செய்து வழிபட்டனர். நிறைவாக பாலமுருகன் கோயில் வேல் கொண்டுவரப்பட்டு நடந்தது. அபிஷேகம் முருக பெருமான் விக்ரகத் தில் வேல் சாற்றப்பட்டு சிறப்பு பூஜை செய்தனர். நிகழ்ச்சியில் சாரதா மடம் யதீஸ்வரி, சாரதேஸ்வரி, சொக்கநாத புரம் ஐயப்பா சுவாமிகள், சின்ராஜ், பிரபு, முன்னாள் தலைமையாசிரியர் ராதா கிருஷ்ணன், மற்றும் பக்தர்கள் கலந்து கொண்டு சாமி தேசம் செய்தனர்.



## ரீஜென்ட் ஜவுளி ரெடிமேட் ஷோரூம் திறப்பு விழா

மதுரை, டிச,23-

மதுரை அவனியாபுரம் பைபாஸ் ரோட்டில் கோவில்பட்டி மற்றும் அருப்புக்கோட்டையை தொடர்ந்து ரீஜென்ட் குழுமத்தினர் தங்களது புதிய ரீஜென்ட் பட்டு ஜவுளி ரெடிமேட் ஷோரூம் திறப்பு விழா நடைபெற்றது. இவ்விழாவில் இயற்கை விஞ்ஞானி பொன்னுசாமி, ரீஜென்ட் டைரக்டர் அக்ஷயா திறந்து வைத்தனர். கடையின் சிறப்பம்சமாக மதுரை மக்களின் எண்ணங்களை பூர்த்தி செய்யும் வண்ணமயமாய் விதவிதமாக பட்டு ,பேன்சி சேலைகள், சுடிதார், நைட்டி மற்றும் குழந்தைகளுக்கான ரெடிமேட், ஆண்களுக்கான ஷர்ட், பேண்ட், டீ சர்ட், பெர்முடாஸ், மற்றும் அனைத்து உள்ளாடைகளையும் உற்பத்தி விலைக்கே தருகின்றனர்.

இந்நிகழ்வில் நிர்வாக இயக்குனர்கள் ஹரிபாலகன், மகேந்திரன், தட்சிணாமூர்த்தி, நிர்வாகத்தினர் மஹாலட்சுமி, மாரியம்மாள், பிரசன்னா, ராகுல், சித்ரா பிரியதர்ஷினி, ரஞ்சித், மாளவிகா மோத்தி மற்றும் நிறுவன பணியாளர்களும் கலந்து கொண்டனர். நிர்வாக இயக்குனர்கள் ஹரிபாலகன், மகேந்திரன், தட்சிணாமூர்த்தி ஆகியோர் விழாவில் கலந்து கொண்ட அனைவருக்கும் நன்றி தெரிவித்தனர்.



## தமிழ்நாடு ஜல்லிக்கட்டு பேரவையின் 19வது ஆண்டு பொதுக்குழு கூட்டம்

மதுரை, டிச.23-

மதுரையில் தமிழ்நாடு ஜல்லிக்கட்டு பேரவையின் 19 வது ஆண்டு பொதுக்குழு தலைவர் பி.ராஜசேகர் தலைமையில் நடைபெற்றது.அதில் வாடிவாசல் ஆடுகளத்தின் பரப்பளவை குறைந்தபட்சம் 200 சதுர மீட்டராக நிர்ணயித்து உரிய திருத்தங்கள் செய்து புதிய அரசாணை வெளியிட வேண்டும். அனைத்து மாவட்ட கிராமத்து மக்களும் ஜல்லிக்கட்டு நடத்துவதற்கு வாய்ப்பளிக்கும் வகையில் விண்ணப்பிக்கும் அனைவருக்கும் அனுமதி கிடைக்கும் விதமாக அரசு ஆணை வழங்கி உதவிட வேண்டும்.

தமிழகத்தில் ஜல்லிக்கட்டு ஒவ்வொரு ஆண்டும் ஜனவரி மாதம் முதல் மே மாதம் அனுமதி வழங்கி உள்ளது.அதனை மாற்றி மாதம் தோறும் நடத்திட அனுமதித்து அரசு ஆணை வழங்கிட வேண்டும். உள்ளிட்ட பல்வேறு தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன. கூட்டத்தில் தமிழ்நாடு முழுவதும் இருந்து பொதுக்குழு உறுப்பினர்கள் மற்றும் ஜல்லிக்கட்டு பேரவை அமைப்பினர் கலந்து கொண்டனர்.



## வேலூர் ஆட்சியரகத்தில் திங்கட்கிழமை மக்கள் குறைதீர்வு நாள் கூட்டம்

வேலூர், டிச.23-

வேலூர் மாவட்டம், வேலூர் தாலுகா சத்துவாச்சாரி, மாவட்ட ஆட்சியர் அலுவலக காயிதே மில்லத் கூட்டரங்கில், திங்கட்கிழமை மக்கள் குறைதீர்வு நாள் கூட்டத்தில் மாவட்ட வருவாய் அலுவலர் மா.சிவசுப்பிரமணியன், பொதுமக்களிடமிருந்து மனுக்களை பெற்று சம்பந்தப்பட்ட துறை அலுவலர்களிடம் வழங்கி நடவடிக்கை எடுக்க உத்தரவிட்டார். இக்கூட்டத்தில் மாவட்ட பிற்படுத்தப்பட்டோர் நலத்துறை அலுவலர் ஜெயசித்ரா மற்றும் துறை சார்ந்த அலுவலர்கள் என பலர் கலந்து கொண்டனர்.

## மக்கள் குறைதீர்க்கும் நாள் கூட்டத்தில், பொதுமக்களிடமிருந்து மொத்தம் 430 மனுக்கள் பெறப்பட்டுள்ளது

### மாவட்ட ஆட்சித்தலைவர் கா.பொற்கொடி தகவல்

சிவகங்கை, டிச.23-

சிவகங்கை மாவட்ட ஆட்சியர் அலுவலகக் கூட்டரங்கில் மக்கள் குறைதீர்க்கும் நாள் கூட்டம் நடைபெற்றது.

இதில், இலவச வீட்டுமனைப் பட்டா, சமூக பாதுகாப்பு திட்டத்தின் கீழ் உதவித்தொகை, மாவட்ட ஊனமுற்றோர் மற்றும் மறுவாழ்வுத்துறை உதவித்தொகை மற்றும் மாற்றுத்திறனாளிகளுக்கான உபகரணங்கள், புதிய மின்னணு குடும்ப அட்டை போன்ற பல்வேறு கோரிக்கைகளை வலியுறுத்தி, பொதுமக்களிடமிருந்து 430 மனுக்கள் பெறப்பட்டுள்ளது. அம்மனுக்களில் தகுதியுடைய மனுக்கள் மீது தனி கவனம் செலுத்தி, விரைந்து நடவடிக்கை எடுக்க சம்பந்தப்பட்ட துறை அலுவலர்களுக்கு மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி கா.பொற்கொடி,இ.ஆ.ப., அவர்களால் அறிவுறுத்தப்பட்டுள்ளது.

இன்றையதினம் நடைபெற்ற மக்கள் குறைதீர்க்கும் நாள் கூட்டத்தில் மாவட்ட வருவாய் அலுவலர் மற்றும் துறை சார்ந்த அனைத்து துறை அலுவலர்கள் ஆகியோர் கலந்து கொண்டனர்.



■ மதுரை மாவட்டம், மாட்டுத்தாவணி பேருந்து நிலையம் அருகில் தமிழ்நாடு தொழில் வளர்ச்சிக் கழகம் (தொழில் துறை) சார்பில் 9.60 ஏக்கர் பரப்பளவில் ரூபாய் 314.29 கோடி மதிப்பீட்டில் கட்டப்பட்டு வரும் மதுரை தகவல் தொழில்நுட்பப் பூங்கா கட்டுமான பணிகளைதொழில்துறை அமைச்சர் டாக்டர் டி.ஆர்.பி.ராஜா ஆய்வு செய்து பார்வையிட்டார். மதுரை வடக்கு சட்டமன்ற உறுப்பினர் கோ.தளபதி ,மாவட்ட வருவாய் அலுவலர் க.அன்பழகன் உள்ளிட்ட அரசு அலுவலர்கள் ஆகியோர் உடன் உள்ளனர்

## கிறிஸ்து பிறப்பு விழா கடவுளின் அன்பை வெளிப்படுத்துகிறது மதுரை பேராயர் வாழ்த்து



மதுரை, டிச.23-

உலகம் முழுவதும் கிறிஸ்துமஸ் பண்டிகை வருகிற 25ந்தேதி (வியாழக்கிழமை) கொண்டாடப்படுகிறது. இதனை முன்னிட்டு, மதுரை உயர் மறை மாவட்ட பேராயர் அந்தோணிசாமி சவரிமுத்து செய்தியாளர் சந்திப்பில் கூறியதாவது

கிறிஸ்து பிறப்பு விழா, கடவுளின் அன்பை வெளிப்படுத்தும் விழாவாக உள்ளது. கிறிஸ்துவின் பிறப்பு வெறும் செய்தி அல்ல. உலகுக்கு அளிக்கப்பட்ட நற்செய்தி. உலகில் மானுடனாய் உருவெடுத்து, உலகிற்கு ஒளியூட்டிய அவர். அவரது பிறந்த நாளை உலகத்தினர் அனைவரும் கொண்டாடுவது வெறும் அடையாளம் அல்ல. இக்கொண்டாட்டத்தின், ஒவ்வொரு பரிமாணமும் அர்த்தம் உள்ளவை. கிறிஸ்துவின் தோற்றத்திற்கு பின் உருவான மானுட வளர்ச்சி அனைத்து சிந்தனை வடிவங்களிலும், கருத்தியல் புரட்சிகளிலும் இயேசு தந்த நற்செய்தியின் சாயல் உண்டு.

நாம் ஒவ்வொருவரும், எந்த மதமாகவோ, இனமாகவோ, சாதியாகவோ, குழுவாக இருந் தாலும், மனித இனம் என்ற நிலையில் நாம் அனைவரும் ஒருங்கிணைந்த மக்களாக இருக்கிறோம். நல்லமனம் கொண்ட ஒவ்வொருவரும், கடவுளின் அன்பை பெறுகிறார் கள். எல்லோரும் இணைந்து வாழ வேண்டும். நம்முடைய நிலைக்கு ஏற்ப நம்மால் முடிந்த உதவிகளை மற்றவர்களுக்கு செய்ய வேண்டும். கடவுளை நம்பி, கடவுளை வேண்டி, நமது அன்றாட செயல்களை செய்து, அனைவரையும் சகோதரத்துவத்துடன் பார்க்க வேண் டும். கிறிஸ்து பிறப்பு பெருவிழா என்பது, சமூக விழாவாக, மனிதனை வாழ வைக்கும் விழாவாக உள்ளது. இந்த விழாக்களில் ஒருவருக் கொருவர் கைகொ டுத்து, அனைவருடன் இணைந்து வாழும் மக்களாக வாழ்வோம். ஒவ்வொருவரின் குடும் பத்திலும், இறை அமைதி, இறை மகிழ்ச்சி என்றும் நிறைவாக இருக்க உங்களுக்காக ஜெபிக்கிறேன். அனைவருக்கும் கிறிஸ்து பிறப்பு நல்வாழ்த்துக்கள் என மகிழ்ச்சியுடன் கூறினார்.



■ தமிழ்நாடு சீருடை பணியாளர் தேர்வு வாரியம் சார்பில் 1299 சார்பு ஆய்வாளர் தேர்வு செய்வதற்கான எழுத்துத் தேர்வு தமிழகம் முழுவதும் இன்று நடைபெற்றது. அதனைத் தொடர்ந்து தேனி மாவட்டத்தில் 3 இடங்களில் தேர்வு நடைபெற்றது. மேற்படி தேர்வு மையங்கள் மற்றும் பாதுகாப்பு ஏற்பாடுகளை காவல்துறை தலைவர் Dr.P.K.செந்தில்குமாரி IGP SUPER CHECK OFFICER அவர்கள், தேனி மாவட்ட காவல் கண்காணிப்பாளர் Dr.B.சினேஹா ப்ரியா, பார்வையிட்டு ஆய்வு செய்தனர்.

Printed by A.PONRAJ, published ,owned by A.PONRAJ and printed at "SRI SAAI PRINTERS"No.122,Neethipathi, Rajasekaran Street,vaarasanthai road,Sivaganga and published at 6 a, madurai road Sivaganga, Sivaganga district,Editor A.PONRAJ. Ph: 8508502161